

மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. புதூர் பகுதியில் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார், உடன் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ஏ.கே.ஆறுமுகம், ரவீந்திரன், பி.டி. மணிமாறன், வைகை பரமன், புண்ணியமூர்த்தி, சரவணன் அம்பலம், குரும்பன், ராதாகிருஷ்ணன், பொன் சேது ராமலிங்கம், புதூர் வேலு, மாதவன், ஆழ்வார், திராவிட மாரி, தமிழ்ச்சந்திரன், ராமபிரசாத், சேக் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.

### தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன்

# தென்காசி தொகுதி சுரண்டை - கீழப்பாவூர் உட்பட்ட பல கிராமங்களில் வாக்கு சேகரிப்பு!

## வே.ஜெயபாலன் - பொ.சிவபத்மநாதன் - பூங்கோதை ஆலடி அருணா பங்கேற்பு!





தென்காசி.ஏப்.12-

தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர். கலை கதிரவன் கடந்த 06 042026 முதல் தென்காசி நகரம்,குற்றாலம் பேரூர், சுரண்டை நகரம்,ஆலங்குளம் வடக்கு ஒன்றியம் ஆகிய பகுதிகளில் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார். தொடர்ந்து அவர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் கொளுத்தும் வெயிலில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். செல்லும் இடங்களில் எல்லாம் பெண்கள் அவரை ஆரத்தி எடுத்தும் மலர் தூவியும், வரவேற்று வருகின்றனர் இந்நிகழ்வின் போது வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவர் கழக வேட்பாளர் டாக்டர். கலை கதிரவனை மகிழ்ச்சியில் கொஞ்சி மகிழ்ந்தார். பிரச்சார நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,முன்னாள் தெற்கு மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன் முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் மா.செல்லத்துரை ஆகியோர் தீவிர வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி தென்காசி தொகுதிக்குட்பட்ட குலையனேரி, ஆனைகுளம், அருணாசரபுரம்,அய்யாபுரம்,திரிகூடபதி, சுப்பையாபுரம், உள்ளிட்ட பகுதிகளில் கழக வேட்பாளர் டாக்டர். கலை கதிரவனை ஆதரித்து முன்னாள் தென்காசி தெற்கு செயலாளர் பொ.சிவபத்மநாபன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் மா. செல்லத்துரை ஆகியோர் கழக அரசின் சாதனைகளை மக்களுக்கு மாறி,மாறி எடுத்து கூறி தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து தென்காசி தொகுதிக்குட்பட்ட கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம் சாலடியூர் பகுதியில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர். கலை கதிரவன் கொளுத்தும் வெயிலில் வீதி வீதியாகச் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும்,சிறிய தெருக்களுக்கு இருசக்கர வாகனத்தில் சென்றும் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கழக அரசு செய்த சாதனைகள் தொடரவும்,திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் சிறப்பான தேர்தல் அறிக்கையை தெரிந்து கொண்ட நீங்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க தயாராக இருக்கிறீர்கள். மீண்டும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் 2.0 ஆட்சி அமைய நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை அதிகமான வாக்கு வெற்றி பெறச் செய்ய வேண்டும்.சொன்னதை செய்வதும்,சொல்லாததை செய்வதும் தான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

தொடர்ந்து கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன் பங்களா சுரண்டை, சுரண்டை காமராஜர் நகர், பட்டாளம், கீழசுரண்டை, ஊர்க்காவல் பெருமாள் கோவில் திடல், சந்தி கோவில் திடல் ஈஸ்வரி அம்மன் கோவில் திடல் (மேல தெரு) நயினார் மில் பின்புறம் குருங்காவனம் உள்ளிட்ட பகுதிகளில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா,நகர செயலாளர் கணேசன்,கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ்,வடக்கு ஒன்றிய செயலாளர் பொன்.செல்வன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் மருத்துவ அணி தலைவர் மாரிமுத்து உட்பட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். பிரச்சாரத்திற்கு சென்ற இடங்களில் எல்லாம் பெண்கள் ஆரத்தி எடுத்து திலகமிட்டும், மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் வரவேற்பு அளித்தனர்.

மேலும் தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர். கலை கதிரவனை வெற்றி பெறச் செய்வதற்கு முழு வீச்சில் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகி கள் தொடர்ந்து தங்களது பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.உதயகுமார், ப.கோபிநாதன், எம்.எல்.ராஜ், இ.முபாரக் மந்திரி, வி.என்.முருகன், எம்.பாலாஜி ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 11.4.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் அலுவலகத்தில் கழக வேட்பாளர், மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் வலையங்குளம் அ.தி.மு.க. கிளை செயலாளர் மாவட்ட இளைஞர் அணி இணைச் செயலாளர் அனல் முத்து தலைமையில் நூறு இளைஞர்கள் அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர். உடன் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.ராமமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்





# தி.மு.க.
# இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். மூன்று கட்ட பரப்புரை முடிந்த நிலையில், நான்காம் கட்டமாக பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**12.4.2026 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.00 மணி | மன்னார்குடி | பெரியார் சிலை அருகில், மன்னார்குடி. |
| காலை 11.00 மணி | நாகப்பட்டினம் | நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் எதிரில், நாகப்பட்டினம். |
| மாலை 4.00 மணி | நன்னிலம் | ஓகை, குடவாசல். |
| மாலை 5.30 மணி | பூம்புகார் | மங்கைநல்லூர், குத்தாலம். |
| இரவு 7.00 மணி | குறிஞ்சிப்பாடி | வள்ளலார் பேருந்து நிலையம் எதிரில், வடலூர். |
| இரவு 8.00 மணி | நெய்வேலி | இந்திரா நகர், கும்பகோணம் சாலை, நெய்வேலி. |
| இரவு 9.00 மணி | திட்டக்குடி | பேருந்து நிலையம் அருகில், திட்டக்குடி. |

**13.4.2026 திங்கள்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | விழுப்புரம் | நான்கு முனை சாலை சிக்னல், விழுப்புரம். |
| காலை 10.45 மணி | திருக்கோவிலூர் | பேருந்து நிலையம் அருகில், திருக்கோவிலூர். |
| மாலை 4.00 மணி | செஞ்சி | நான்கு முனைச் சந்திப்பு, விழுப்புரம் சாலை, செஞ்சி. |
| மாலை 5.30 மணி | திண்டிவனம் | செஞ்சி சாலை, திண்டிவனம். |
| இரவு 7.00 மணி | செங்கல்பட்டு | இராட்டினம் கிணறு, செங்கல்பட்டு. |
| இரவு 9.00 மணி | ஆலந்தூர் | அண்ணா சிலை அருகில், ஸ்டேட் பேங்க் குடியிருப்பு, நங்கநல்லூர். |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 11.4.2026

கலைஞர் 100 1924 - 2023









இராணி மங்கம்மாள் காலனி பகுதியில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கியது தி.மு.க. அரசு என்று திண்டுக்கல் 2வது வார்டு பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் தி.மு.க. வேட்பாளர் ஐ.பி.செந்தில் குமார் பேசியதோடு, மக்கள் நலனில் அக்கறை கொள்ளாத அ.தி.மு.க. வேட்பாளர் சீனிவாசனால் எப்படி குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்க முடியும் என ஐ.பி.செந்தில்குமார் கேள்வி எழுப்பி வாக்குச் சேகரித்தார்.





மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தொடர்ந்து ஒன்பதாவது நாளாக இராமநாதபுரம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சீதக்காதி நகர்,கோவிந்தனேந்தல்,அச்சடிபிரம்பு, பால்க்கரை,ஆர்.எஸ்.மடை, கம்மாய் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாக பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர் எல்லோரின் இல்லங்களிலும் உதயசூரியன் சின்னமும் ஸ்டாலின் தான் மீண்டும் முதல்வர் என்கிற எண்ணமும் மீண்டும் வெல்வது தி.மு.க. தான் என்பதை உறுதி செய்தது